தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திருமதி. இரா. லலிதா , இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

---

செயல்முறை ஆணை எண். 5810/டி3/2022, நாள்:28.04.2023

பொருள்: நிர்வாகம் – தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் – அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, திருச்சி – (லேட்) திரு.மு.சந்திரசேகரன், விரிவுரையாளரின் (அமைப்பியல்) வாரிசுதாரர் (மனைவி) திருமதி.க.புவனேஸ்வரி, என்பவருக்கு கருணை அடிப்படையில் ஸ்ரீரங்கம், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது – பணிவரன்முறைப்படுத்தி அரசாணை வழங்கப்பட்டது – இயக்குநர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (3ப) எண்.5. உயர்கல்வித் (சி2) துறை, நாள் 6.4.2023.

---

பார்வையில் காணும் அரசாணையில், ஸ்ரீரங்கம், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் வழங்கப்பட்டு, 27.01.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திருமதி.க.புவனேஸ்வரி, என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை இணைக்கப்படுகிறது)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)–ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை (அசல்)

ஒம்/– இரா. லலிதா
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

பெறுநர்
திருமதி.க.புவனேஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
ஸ்ரீரங்கம், திருச்சி. (முதல்வர் வழியாக)

நகல் :
முதல்வர்
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி.
ஸ்ரீரங்கம், திருச்சி.

டி3/ தொகுப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2/5/2023
உதவி இயக்குநர் (நிருவாகம்)

9/12/23
PRINCIPAL
GOVT. POLYTECHNIC COLLEGE
SRIRANGAM.

02-05-2023